**வணிக வழக்குக்கான சார்பு நீதிமன்றம்,**
**ஸ்ரீ னிவாசபுரம், காந்திபுரம்,**
**கோயம்புத்தூர்.**

C.O.S.No. 88 Of 2025

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18- வது நாள் புதன்கிழமை 1969 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் **திரு.சி.பி.வேதகிரி.,பி.பார்ம்.,எம்எஸ்-ஐடி(ஆஸ்திரேலியா).,எல்எல்எம்.,** நீதிபதி, வணிக நீதிமன்றம், (சார்பு நீதிபதி), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. அனித் சங்கர் | கிராமம்: | |
| க.பெ. (அ)<br>த.பெ. | திரு. சங்கரையா | வேலை: | மேலாளர்,<br>கனரா வங்கி,<br>அன்னூர் கிளை. |
| வயது | 35 | செல்போன் எண் | |

வா.சா.1 **திரு. அனித் சங்கர்** ஆக 18.02.2026 அன்று ஆஜராகி

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மைதான்.சங்கதிகளை நான் அறிவேன். நிரூபண வாக்குமூலத்தில் நான் கையொப்பமிட்டுள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. **26.09.2022 –** பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்பம் - அசல் - **Ex.A1 –** ஆக குறியீடு செய்யப்பட்டது.

2. **26.09.2022 –** அனுமதி குறிப்பாணை - அசல் - **Ex.A2 –** ஆக குறியீடு செய்யப்பட்டது.

3. **26.09.2022 –** பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த விவசாய கடன் ஒப்பந்தம் - அசல் - **Ex.A3 –** ஆக குறியீடு செய்யப்பட்டது.

4. **20.10.2023 –** பிரதிவாதி எழுதிக்கொடுத்த Acknowledgement of Debt - அசல் - **Ex.A4 –** ஆக குறியீடு செய்யப்பட்டது.

5. **22.10.2010 to 22.12.2023 –** கணக்குப்பட்டியல் - கணினி வழி அசல் - **Ex.A5 –** ஆக குறியீடு செய்யப்பட்டது.

6. **10.09.2024** – Mediation report - அசல் - **Ex.A6 –** ஆக குறியீடு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கு விவரங்கள் அனைத்தும் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். பிரமாணவாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தீர்களா என்றால் ஆமாம். பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் கடன் தொகை பற்றி உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். வா.சா.ஆ.1 கடன் விண்ணப்பம் ஆங்கிலம் மற்றும் இந்தியில் அச்சிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பக்கம் 9ல் கையொப்பம் தமிழில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு ஆங்கிலம் மற்றும் இந்தி தெரியாத பட்சத்தில் வா.சா.ஆ.1ன் சங்கதிகள் அவருக்கு எடுத்துரைக்கப்பட்டு அதை பிரதிவாதி புரிந்து கொண்டார் என்பதை ஊர்ஜிதம் செய்ய வாதி வங்கி சார்பில் வா.சா.ஆ.1ல் குறிப்பு ஏதும் இல்லை என்றால் சரிதான், அதற்கு தனியாக NF 821 என்ற ஆவணம் வங்கி வசம் பராமரிக்கப்படும். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் உள்ள விவரங்கள் வங்கி அதிகாரியால் கையால் எழுதப்பட்டு பூர்த்தி

செய்யப்பட்டது, பிரதிவாதியால் எழுதப்பட்டது அல்ல என்றால் சரிதான். அதற்கு பிரதிவாதியிடம் தனிப்பட்டு ஏதேனும் ஒப்புதல் கையொப்பம் பெறப்பட்டதா என்றால் இல்லை வா.சா.ஆ.1 விவரத்தை எடுத்துக்கூறி பிரதிவாதியிடம் கையொப்பம் பெறப்பட்டது. பிரதிவாதியே பூர்த்தி செய்யாமலும், அவரின் ஒப்புதலின் பேரில் பூர்த்தி செய்யப்பட்டடது என குறிப்பு இல்லாத காரணத்தினாலும் வா.சா.ஆ.1 செல்லத்தக்கது அல்ல, பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதி வங்கி சார்பில் பிரதிவாதியிடம் கையொப்பம் பெறப்பட்ட அனைத்து ஆவணங்களும் ஆங்கிலம் மற்றும் இந்தியில் அச்சிடப்பட்டுள்ளது, அவற்றில் பிரதிவாதி தமிழில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2, 3 மற்றும் 4 ஆகிய ஆவணங்கள் பிரதிவாதியால் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் சரிதான். உங்கள் வங்கி அதிகாரிகளால் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களில் பிரதிவாதி புரிந்து கொண்டு தான் கையொப்பம் செய்துள்ளார் என குறிப்பு ஏதும் இல்லை என்றால் சரிதான், கையொப்பம் பெறும் சமயத்தில் பிரதிவாதியிடம் அனைத்து ஆவணங்களின் சரத்து விவரம் வாய் மொழியே குறிப்பிடப்பட்டிருக்கும். அதற்கு ஆதாரமாக NF 821 ஆவணம் இருக்கும். தாவா கடன் தொகை எதற்காக கொடுக்கப்பட்டது என்றால் மாடு வாங்குவதற்காக கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ-1 பக்கம் 7ல் 7 மாடுகள் வாங்குவதற்காக தாவா கடன் வழங்கப்படுவதாக கண்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி 7 மாடுகள் வாங்கினாரா என்பதை ஊர்ஜிதம் செய்ய அவரிடத்திற்கு நேரில் சென்று பார்த்தார்களா என்றால் கண்டிப்பாக பார்த்திருப்பார்கள் (Post sanction visit), அதற்கு insurance எடுத்திருப்பார்கள். Post sanction visit ஆய்வறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வங்கி வசம் உள்ளது தாக்கல் செய்ய இயலும். வா.சா.ஆ.5ல் கடன் தொகை ரூபாய் 5 இலட்சத்தை பிரதிவாதியின் வங்கி கணக்கிற்கு (4375119001477) செலுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா வங்கி கடன் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2ன் படி தாவா கடன் CGFMU (Credit gurantee fund for micro units)ன் படி cover செய்யப்பட்டுள்ளது. தாவா கடன் தொகை வாடிக்கையாளர் செலுத்தவில்லை என்றால் இந்த திட்டத்தின் படி அரசாங்கம் நிலுவைத்தொகையை செலுத்திவிடும் என்றால் சரியல்ல, அரசு தொகையை வங்கிக்கு அளிக்கும், வாடிக்கையாளரிடம் தனிப்பட்ட நடவடிக்கைகளிலோ அல்லது நீதிமன்றம் மூலமாகவோ வசூல் செய்யப்படும் தொகையை வங்கி அரசுக்கு திருப்பி செலத்த வேண்டும். தாவா நிலுவைத்தொகையை வங்கி மத்திய அரசிடம் இருந்து பெற்றுள்ளதா என்றால்

இல்லை. மேற்படி விவரத்தை பிராதிலோ அல்லது பிரமாணவாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான் வா.சா.ஆ.2 அனுமதி கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். வா.சா.ஆ-5 கணக்குப்பட்டியலில் மாடுகளுக்கு insurance renewal தொகை செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா கடன் பிரதிவாதிக்கு தான் வழங்கப்பட்டது என்பதற்கு அவரது ஆதார் அல்லது குடும்ப அட்டை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் வங்கி வசம் கண்டிப்பாக இருக்கும் தாக்கல் செய்ய இயலும். வா.சா.ஆ.1 விண்ணப்பத்தில் பிரதிவாதியின் புகைப்படத்தின் மேல் அவரது கையொப்பம் இல்லை என்றால் அப்படி வாங்குவது வழக்கம் இல்லை. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு கடன் நிலுவைத்தொகையை கட்ட வேண்டி அறிவிப்பு ஏதேனும் அனுப்பப்பட்டதா என்றால் இல்லை, 2 முறை சமரச மையத்தில் பேசப்பட்டது. பிராதில் எந்த தேதியில் கடன் கணக்கு NPA ஆனது என குறிப்பிட்டு சொல்லி உள்ளீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.5 கணக்குப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு எந்த கடன் தொகையும் வாதி வங்கியால் அளிக்கப்படவில்லை, பிரதிவாதி கடன் தொகையை கட்ட கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI

Digitally signed by CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI
Date: 2026.02.18 19:04:53 +0530

Judge,
Commercial Court,
(Senior Civil Judge Cadre),
Coimbatore.